உதவி ஆணையர் அலுவலகம்

இந்து சமய அறநிலையத்துறை,

திருநெல்வேலி.2

## கிராமக் கோயில் பூசாரிகள் நலவாரியம் - உறுப்பினர் சேர்க்கைக்கு தகுதிகள் மற்றும் உறுப்பினர் சேர்க்கை படிவம்.

1) இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இல்லாத கிராமப்புற திருக்கோயில்களில் பணிபுரியும் பூசாரிகளுக்கு அரசுக்கடிதம் நிலை.239 மற்றும் 240 – நாள். 11.6.07 உத்திரவின்படி கிராமக்கொயில் பூசாரிகள் நலவாரியம் அழைக்கப்பட்டுள்ளது.

2) நலவாரிய உறுப்பினர்களாக சேருவதற்கு தகுதிகள் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்படுகிறது.

1. வயது வரம்பு 21 வயது நிரம்பியிருக்க வேண்டும். 60 வயதிற்குள் இருக்க வேண்டும்.
2. உறுப்பினரின் ஆண்டு வருமானம் ரூ.24,000/-க்குள் இருக்க வேண்டும்.
3. உறுப்பினர் பணிபுரியும் திருக்கோயில் இந்து சமய அறநிலையத்துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத கிராமப்புற திருக்கோயிலாக இருக்க வேண்டும்.
4. உறுப்பினர் பணிபுரியும் திருக்கோயில் அமைக்கப்பட்டு. வழிபாடு ஆரம்பித்து 10 ஆண்டுகள் நிறைவு பெற்றிருத்தல் வேண்டும்.
5. உறுப்பினர் திருக்கோயிலில் பூசாரியாக பணிபுரியும் சான்று, திருக்கோயில் அமைந்துள்ள கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலர் அல்லது ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை ஆய்வர் ஆகியோரிடம் பெற்றிருத்தல் வேண்டும்.
6. உறுப்பினர் பணிபுரியும் திருக்கோயில் அனைவரும் வழிபடும் திருக்கோயிலாக இருக்க வேண்டும்.
7. உறுப்பினர் பணிபுரியும் திருக்கோயிலில் அந்தந்த திருக்கோயில் பழக்க வழக்கபடியும். காலக் கிராமத்தின் படியும் பூஜைகள் நடைபெற வேண்டும்.
8. உறுப்பினர் மாதிரி படிவ நகல் இத்துடன் அனுப்பப்படுகிறது.

இதன்படி இக்கோட்டத்தில் 1537 கிராமப்புற திருக்கோயில் பூசாரிகள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கு 107 நபர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

ஆறு நபர்களுக்கு கீழ்க்கண்ட விவரப்படி தொகை வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) உறுப்பினர் மரணம் | 1 | ரூ. 15,000/- |
| 2) உறுப்பினர் குழந்தைகள் கல்வி செலவிற்கு | 4 | ரூ. 1,500/- |
| 3) மூக்கு கண்ணாடி | 1 | ரூ. 500/- |

கிராமக் கோயில் பூசாரிகள் நலவாரியம் உறுப்பினர் சேர்க்கை

விண்ணப்ப படிவம்

1. விண்ணப்பதாரர் பெயர் . .
2. பிறந்த தேதி மற்றும் வயது (சான்று இணைக்கப்பட வேண்டும்) . .
3. ஆண் / பெண் . .
4. விண்ணப்பதாரர் முகவரி . .
5. பூசாரியாக பணிபுரியும் திருக்கோயில் களின் பெயர் மற்றும் முழு முகவரி (ஒன்றுக்கு மேற்பட்ட திருக்கோயில்களில் பணிபுரிந்தாலும் குறிப்பிட வேண்டும்) . .
6. இத்திருக்கோயிலின் வழிபாடு துவங்கி எத்தனை வருடங்கள் ஆகிறது? எத்தனை சன்னதிகள் உள்ளது? அவற்றின் விவரம் (கிராம நிர்வாக அலுவலர் சான்று இணைக்கப்பட வேண்டும்) . .
7. திருக்கோயில் அமைந்துள்ள இடம், எண் விவரங்களுடன் (கிராம நிர்வாக அலுவலர் சான்று இணைக்கப்பட வேண்டும்) . .
8. இத்திருக்கோயில் இந்து சமயத்தைச் சார்ந்த அனைவரும் வழிபடும் உரிமை உள்ளதா? . .
9. திருக்கோயிலின் விண்ணப்பதாரர் எத்தனை ஆண்டுகளாக பூசாரியாக பணிபுரிந்து வருகிறார்? (இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆய்வர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் அல்லது ஊராட்சி மன்றத் தலைவர் சான்று இணைக்கப்பட வேண்டும்). . .
10. இத்திருக்கோயிலில் (தினமும்/வாரம் ஒரு. . முறை பழக்க வழக்கத்தின் படி பூசைகள் நடைபெறும்.
11. விண்ணப்பதாரரின் ஆண்டு வருமானம் (கிராம நிர்வாக அலுவலர் சான்று இணைக்கப்பட வேண்டும்) . .
12. குடும்ப உறுப்பினர்கள் விவரம் கணவர்/மனைவி, மகன், மகள் ஆகியோர் விவரம்) . .

(அ) அவர்களில் பூசாரியாக பணிபுரிபவர்கள்

விவரம்

இந்த விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை எனவும் இத்திருக்கோயில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இல்லை எனவும் உறுதி கூறுகிறேன்

இடம்: விண்ணப்பதாரர் கையொப்பம்.

நாள்:

## சான்று

மேலே தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் ஆவணங்கள் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டது. வரிசை எண்.1 முதல் 12 வரை தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களும் சரியானவை என்று சான்றளிக்கப்படுகிறது.